ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1906/46 - 2015 මාර්තු මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.03.19

*1906/46 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

LA/*2125*

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையிடம் பிரேரிக்கப்பட்டுள்ள மொனறாகலை மடுல்ல நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் களஞ்சிய தாங்கி நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்*
*வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2015, மாச்சு 10.*
*5/2/1/1041*

**அட்டவணை**

*மொனறாகலை மாவட்டத்தில் மடுல்ல பிரதேச செயலகப் பிரிவில் அல்லெகொண கிராம அலுவலர் பிரிவில் தம்பகல்ல கல்கொடகம கிராமத்தில் அமைந்துள்ள திட்ட இல. இ. கி. தி. 594 திட்டத்திலுள்ள இல. 980 எனும் காணியில் இருந்து சுமார் 40 பேர்ச்சஸ் மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் இ. கி. தி. 594 திட்டத்திலுள்ள இல. 986 காணி ; |
| கிழக்கு | : | இந்த காணியின் எஞ்சிய பகுதி ; |
| தெற்கு | : | கலகொடகமவிலிருந்து கொணதலாவ வரையான வீதி ; |
| மேற்கு | : | இ. கி. தி. 594 திட்டத்திலுள்ள இல. 986 காணி. |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி :* 1. *திருமதி டபிள்யூ. பி. பத்மா,*
*எம். ஓ. எச். வீதி,*
*சிறீவிஜயபுர,*
*மொனறாகலை.*

*4- 163*

MP/2253

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையின் எட்டம்பிட்டி நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் பல்லேகம வேல்லேவெல நீர் சுத்திகரிப்பு அலகு மற்றும் நீர் பொம்பு நிலையம் நிர்மாணித்தல் பொருட்டு காணித்துண்டொன்று தேவைப்பட்டிருப்பதால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக்கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 27.
5/2/1/1092.

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில், ஹாலிஎலை பிரதேச செயலகப் பிரிவில், பல்லேகம கிராம அலுவலர் பிரிவின் பல்லேகம, வெல்லேவெல கிராமத்தில் அமைந்துள்ள 28264 ஆம் இலக்க ஜயபூமி உறுதிச்சான்றிதழில் காணியின் மொத்த அளவிலிருந்து சுமார் ஒரு ஏக்கர் (01) மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளினுள் இருக்கும் காணித்துண்டு :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரசாங்கக் காணி ; |
| கிழக்கு | : | திரு. யூ. எல். ரணசிங்க சொந்தம் கொண்டாடுகின்ற அக்காணியின் மீதித்துண்டு; |
| தெற்கு | : | திரு. உபகண்டசபா சொந்தம் கொண்டாடுகின்ற காணி ; |
| மேற்கு | : | வெலிமடையிலிருந்து அட்டம்பிட்டிய வரையான வீதி . |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : 1. திரு. யூ. எல். ரணசிங்க,
வேல்லேவெல,
அட்டம்பிட்டி.

4- 164

---

LA/2195

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையிடம் பிரேரிக்கப்பட்டுள்ள மாத்தறை IV ஆம் கட்ட நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு நிலையம், களஞ்சிய தாங்கி, நிர்வாகக் கட்டிடம், இயந்திர நிலையம் மற்றும் உத்தியோகபூர்வ விடுதியினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, பெப்புருவரி 27.
5/2/2/1068.

**அட்டவணை**

*மாத்தறை மாவட்டத்தில் மாலிம்பட பிரதேச செயலகப் பிரவில், இல. 350 A, கட்டுவன்கொடை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கட்டுவலகேவத்த மற்றும் புஞ்சிஹாமிலாகே கொரட்டுவ எனும் காணியில் இருந்து சுமார் 03 ஏக்கர், 02 றூட் மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-*

வடக்கு : ஹோன்பலஹேன மற்றும் எலோகந்த வத்த காணி ;

கிழக்கு : எலோகந்த வத்த காணி மற்றும் பிரதான வீதியில் இருந்து கட்டுவன்கொடை வரையான வீதி ;

தெற்கு : கட்டுவன்கொடை வரையான வீதி மற்றும் பேருவலகே வத்த காணி ;

மேற்கு : இஹலகேவத்த மற்றும் கொட்டபலகேவத்த காணி.

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:*

*1. திரு. என். பீ. பலிஹவடன மற்றும்
திரு. ராமசிரி பலிஹவடன,
பங்களாவ,
மாலின்பட வீதி,
கத்துவ - தெளிஜ்ஜவிலை.*

*4-165*